# பொன்னேரி நகராட்சி
## நகர்மன்ற சாதாரணக்கூட்டம்

பொன்னேரி நகராட்சியின் நகர்மன்ற சாதாரணக்கூட்டம் நகர்மன்றத்தலைவர் திருமதி. கே. பரிமளம் விஸ்வநாதன் அவர்களின் தலைமையில் 2023 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 31.07.2023 திங்கள் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றக்கூடத்தில் நகர்மன்ற தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகள் .

## நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்

**பொருள் எண் 1**

நகர்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட மேயர்கள், துணை மேயர்கள், மன்றத் தலைவர்கள், மன்றத் துணைதலைவர்கள் மற்றும் மன்ற உறுப்பினர்களுக்கு மாதற்தோறும் வழங்கப்படும் மதிப்பூதிய தொகையை ஜுலை 2023 முதல் உயர்த்தி வழங்கிட வெளியிடப்பட்ட நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை அரசாணை(நிலை) எண்:98 நாள்:13.07.2023 மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

பதிவு செய்யப்பட்டது .
( ந.க.எண்: 117 /2022 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 255 நாள்: 31 .07.2023

**தீர்மானம் : பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண் 2**

இந்நகராட்சியின் ஆணையர் அவர்களின் ஜுன் 2023 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 256 நாள்: 31 .07.2023

**தீர்மானம் : அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண் 3**

இந்நகராட்சியின் பொறியாளர் அவர்களின் ஜுன் 2023 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பதிவிற்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:- மன்றம் அனுமதி அளிக்கலாம்

நகர்மன்ற தீர்மான எண்: 257 நாள்: 31 .07.2023

**தீர்மானம் : அனுமதி அளிக்கிறது.**

## <u>பொருள் எண் 4</u>

பொன்னேரி நகராட்சியில் வரிவசூல் உள்ளிட்ட அனைத்து துறை பணிகளும், UTIS மென்பொருள் மூலம் நடைபெறுவதால் கணினியில் பதிவேற்றம் செய்வதற்கு 8 எண்ணிகையிலான கணிணிகளை அனைத்து பிரிவு அலுவலர்களும் பயன்படுத்துகின்றனர். மேற்படி கணிணிகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை சரிபார்க்கும் பணியினை மேற்கொள்ளவும், தேவைபடும் கணிணி உதிரிபொருட்களை வாங்கி பொருத்தவும், பிரிண்டர்களின் டோனர்களை ரீபில் செய்யவும், வருடாந்திர பராமரிப்பு ( AMC ) முறையில் மேற்கொள்ளவும், பொறியியல் பிரிவின் திட்டப்பணிகளுக்கான Cad Drawing தயார் செய்யவும், இவ்வலுவலகத்தில் பணியாளர்கள் இல்லாததால் விலைப்புள்ளிகள் பெற்று மேற்படி பணிகளை மேற்கொள்ளவும் நகர்மன்ற தீர்மானம் எண்: 182 நாள்:28.02.2023ன் வாயிலாக அனுமதி வழங்கப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேற்படி நிதி ஒதுக்கீட்டு தொகை இருப்பு இல்லாததால் தொடர்ந்து மேற்படி பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் தோராய செலவினம் ரூ 1.00 லட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண்:133/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 258 நாள்: 31 .07.2023

**தீர்மானம் : ஒப்புதல் வழங்குகிறது**

## <u>பொருள் எண் 5</u>

பொன்னேரி நகராட்சியில் நகலெடுக்கும் கருவி (Xerox Machine) இல்லாததால் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்புகள் பதிவுபெற்ற ஒப்பந்ததாரர்களுக்கு வழங்கிடவும், நகர்மன்ற கூட்ட அறிவிப்பு நகரமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கிடவும், அவ்வப்போது அரசுக்கு அனுப்பிவைக்கப்படும் திட்டமதிப்பீடுகள், கருத்துருக்கள், அறிக்கைகள் ஆகியவை சாய் ஜெராக்ஸ் நிறுவனத்தில் நகலெடுத்துக் கொள்ளவும் தோராய செலவினம் ரூ 30,000/- பொதுநிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>
மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண்: 788 /2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 259 நாள்: 31 .07.2023

**தீர்மானம் : ஒப்புதல் வழங்குகிறது**

**பொருள் எண் 6**

பொன்னேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டம், தூய்மை இந்தியா திட்டம் மற்றும் அரசினால் அவ்வப்போது அறிவிக்கப்படும் திட்டங்களுக்கான பிளக்ஸ் போர்டு, மைக் விளம்பரம் போன்ற இனங்களுக்கான உத்தேச செலவினம் ஓராண்டிற்கு ரூ.2,00,000/- பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்: 401/2022 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 260 நாள்: 31.07.2023

**தீர்மானம் : ஒப்புதல் வழங்குகிறது**

**பொருள் எண் 7**

பொன்னேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு நிரந்தர பணியாளர்களுக்கான சீருடை, தையற் கூலி, காலணிகள், சோப்பு ஆகியவற்றை 2023-2024ம் ஆண்டுக்கு வாங்கி வழங்கிட உத்தேச செலவினம் ரூ.1,20,000/- பொது நிதியில் மேற்கொள்ள மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்: 397/2022 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 261 நாள்: 31.07.2023

**தீர்மானம் : ஒப்புதல் வழங்குகிறது**

**பொருள் எண் 8**

பொன்னேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் 10 நபர்கள் டெங்கு தடுப்பு பணிகளை நகர் மன்றத்தின் அனுமதி பெற்று பணி புரிந்து வருகின்றனர். அவர்களுக்கான ஒரு மாதத்திற்கான ஊதியத்தை மட்டும் ( 01.07.2023 முதல் 31.07.2023 )வரை ஏற்கனவே ஊதியம் வழங்கிய கிரீன் டிரஸ்ட் நிறுவனத்தின் மூலம் பொது நிதியிலிருந்து வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
(ந.க.எண்: 06/2021 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 262 நாள்: 31.07.2023

**தீர்மானம் : ஒப்புதல் வழங்குகிறது**

**<u>பொருள் எண் 9</u>**

பொன்னேரி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து நிர்வாக பணிகள் கணினி மயமாக்கப்பட்டதால் தினசரி மேற்கொள்ளப்பட வேண்டிய வரிவசூல் பணிகள், அலுவலகப்பணிகள், திட்டப்பணிகள், தேர்தல் பணிகள் ஆகியவற்றை மேற்கொள்ள நகராட்சி பணியாளர்கள் எவரும் இல்லாததால் கணினி தொடர்பான அனைத்து பணிகள் மேற்கொள்ள திருமதி. K.U. ஸ்ரீலஷ்மி என்பவரை **2023-2024**ம் ஆண்டு மாவட்ட ஆட்சியர் தினக்கூலி விகிதத்தின்படி பணிக்கு அமர்த்திக்கொள்ளவும், ஊதியம் பொதுநிதியிலிருந்து வழங்கிடவும், தனிஅலுவலர் கூட்ட தீர்மானம் எண் **245** நாள் **30.06.2023** ன்படி அனுமதி வழங்கப்பட்டு அலுவலக பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து அலுவலகப்பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி பணியாளரை 01.08.2023 முதல் **31.10.2023** வரை மூன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
   (ந.க.எண். **677** /2021 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 263 நாள்: **31 .07.2023**

**தீர்மானம் : ஒப்புதல் வழங்குகிறது**

**<u>பொருள் எண் 10</u>**

பொன்னேரி நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு அனைத்து நிர்வாக பணிகள் கணினி மயமாக்கப்பட்டதால் தினசரி கணினி வசூல் மையத்தில் வரிவசூல் பணி மேற்கொள்ளவும், பிறப்பு இறப்பு பதிவு செய்தல், பிறப்பு இறப்பு சான்றுகளை கணிணியிலிருந்து பதிவிறக்கம் செய்தல் பணிக்காக இரு கணிணி இயக்குபவர்கள், நான்கு வாம்பே கழிவறை பராமரிப்பவர், ஐந்து பம்பு ஆப்ரேட்டர் மற்றும் ஒரு இரவு காவலர் ஆகியோரை அன்னை அஞ்சுகம் சுய உதவிக்குழுவின் மூலம் வெளிக்கொணர்வு முறையில் பணிக்கு அமர்த்திக் கொள்ளவும் ஊதியம் பொதுநிதியிலிருந்து வழங்கிடவும், நகர்மன்ற தீர்மானம் எண் **253**, நாள் **30.06.2023**ன் படி ஒப்புதல் வழங்கப்பட்டு அலுவலக பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ந்து அலுவலகப்பணிகள் தொய்வின்றி மேற்கொள்ளும் பொருட்டு மேற்படி பணியாளர்களை **01.08.2023** முதல் **31.10.2023** வரை முன்று மாதங்களுக்கு பணி நீட்டிப்பு செய்யவும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க.எண். **677**/2021/அ**1**)

நகர்மன்ற தீர்மான எண்: 264 நாள்: **31 .07.2023**

**தீர்மானம் : ஒப்புதல் வழங்குகிறது**

**<u>பொருள் எண் 11</u>**

பொன்னேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, வரும் காலம் மழைகாலம் என்பதால் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள, 300 வீடுகளுக்கு ஒரு பணியாளர் என்கின்ற வகையில் பொன்னேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட 7240 வீடுகளுக்கு தினந்தோறும் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ள 24 பணியாளர்கள் தேவைப்படுகிறது. 1.08.2023 முதல் 31.10.2023 வரையிலான காலத்திற்கு 24 பணியாளர்கள் ( 14 பெண்கள் மற்றும் 10 ஆண்கள்) தற்போதைய ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் தேவைக்கேற்ப பணியமர்த்தி கொள்ளவும் தோராய செலவினம் ரூ 11,70,000/-ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண்: 06/2021 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 265 நாள்: 31 .07.2023

**தீர்மானம் : ஒப்புதல் வழங்குகிறது**

**<u>பொருள் எண் 12</u>**

பொன்னேரி நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, ஜெயகோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியின் கழிவறையில் நாப்கின் எரிப்பான் இயந்திரம் ஒன்றும் நாப்கின் வழங்கும் இயந்திரம் ஒன்றும் தேவைப்படுவதால் பொதுசுகாதார நலன் கருதி வாங்கி கொள்ளவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ 1,30,000/- ஐ பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
( ந.க.எண்:341/2022 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 266 நாள்: 31 .07.2023

**தீர்மானம் : ஒப்புதல் வழங்குகிறது**

**<u>பொருள் எண் 13</u>**

பொன்னேரி நகராட்சியில் 6 வது வார்டு எல்லைக்குட்பட்ட விவேகானந்தர் தெருவில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதன் காரணமாக சேதமடைந்த சாலையினை சீரமைக்க தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின்கீழ் தார்ச்சாலை அமைத்திட ஒப்பந்தபுள்ளிகள் கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி மூல மதிப்பீட்டில் ஈரக்கலவை ( WMM ) அமைத்து அதன்மீது தார்தளம் அமைத்திட வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் மேற்படி சாலையில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதன் காரணமாக சாலையின் அடித்தள பரப்பு முற்றிலும் சேதமடைந்தும் , நேரடியாக ஈரக்கலவை ( WMM ) அமைக்க இயலாத நிலையில் உள்ளது. எனவே புதியதாக அமைக்கப்பட உள்ள தார்ச்சாலையின் அவசியம் கருதி தற்போதைய நிலையில் அடித்தள பரப்பினை வலுப்படுத்திட ஏதுவாக மேற்படி சாலையில் GSB வைத்து சீரமைக்கவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.4.80 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. சாலை பயன்பாட்டின் அவசியம் கருதி சாலைத்தன்மைக்கு ஏற்ப மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. பணியின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   ( ந.க.எண். 104 /2023 அ1 )

நகர்மன்ற தீர்மான எண்: 267 நாள்: 31 .07.2023

**தீர்மானம் : குறிப்புகள் மூன்றுக்கும் அனுமதி அளிக்கிறது.**

**பொருள் எண் 14**

பொன்னேரி நகராட்சியில் 11 வது வார்டுக்குட்பட்ட தாயுமான் தெரு மற்றும் 15வது வார்டுக்குட்பட்ட அம்பேத்கர் தெருக்களில் ஏற்கனவே உள்ள மழைநீர் கால்வாய் சாலையின் மட்டத்தை விட மிகவும் தாழ்வாக உள்ளது. இதனால் மழைக்காலங்களில் கால்வாயில் வழிந்தோடும் மழைநீர் கால்வாயினை ஒட்டியுள்ள குடியிருப்பு பகுதிகளை சூழும் நிலை உள்ளது. இதனால் பொதுமக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்படும் நிலை உள்ளதால் அப்பகுதி மக்கள் நகர்மன்ற உறுப்பினர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரிடம் மேற்படி கால்வாயின் மட்டத்தினை சாலையின் மட்டத்திற்கேற்ப உயர்த்தித்தர கோரியுள்ளனர். அதன்படி மேற்படி மழைநீர் கால்வாய்களின் பக்கவாட்டு சுவர்களை உயர்த்தி அமைக்கவும் , அதற்காக கீழ்க்கண்டவாறு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளுக்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ.எண் | வார்டு எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டு தொகை ( ரூ.இலட்சத்தில் ) |
|---|---|---|---|
| 1 | 11 | தாயுமான் தெருவில் மழைநீர் கால்வாயின் பக்கவாட்டு சுவர்களை உயர்த்தி மேல்மூடிகள் அமைத்தல் | 15.60 |
| 2 | 15 | அம்பேத்கர் தெரு, எட்டியம்மன் கோயில் தெரு, பார்த்தசாரதி கோயில் தெருக்களில் | 7.00 |

| | | | |
|---|---|---|---|
| | | உள்ள மழைநீர் கால்வாயின் பக்கவாட்டு சுவர்களை உயர்த்தி அமைத்தல் | |

அலுவலகக்குறிப்பு

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணிகளை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிகளுக்கான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. பணியின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண். 104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 268 நாள்: **31 .07.2023**

**தீர்மானம் : அலுவலகக் குறிப்புகளுக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது**

**<u>பொருள் எண் 15</u>**

பொன்னேரி நகராட்சியில் 7 வது வார்டு எல்லைக்குட்பட்ட கள்ளுக்கடைமேடு பகுதியில் பாதாள சாக்கடை பணிகள் முடிவுற்றதன் காரணமாக சேதமடைந்த சாலையினை சீரமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தற்போது மேற்படி தெருவில் பொதுமக்களின் குடிநீர் வசதிக்காக குடிநீர் விநியோக குழாய்கள் இல்லாத காரணத்தினால் பொதுமக்கள் பிரதான சாலையில் சென்று குடிநீர் பெறும் நிலை உள்ளது. மேலும் மேற்படி தெருவின் அகலம் குறைவாக உள்ளதால் பேவர்பிளாக் கொண்டு சாலை அமைக்கப்பட உள்ளது. இந்நிலையில் சாலை அமைக்கப்பட்ட பின்னர் குடிநீர் விநியோக குழாய்கள் அமைக்கப்படும் சூழ்நிலை ஏற்படின் மீண்டும் சாலை சேதமடைய வாய்ப்பு உள்ளதால் அப்பகுதி மக்கள் ஆணையர் மற்றும் நகர்மன்ற தலைவர் ஆகியோரிடம் குடிநீர் விநியோக குழாய்கள் அமைத்து தரக்கோரியதின்படி இப்பணியினை மேற்கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.**1.00** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது

அலுவலகக்குறிப்பு

1. பொதுமக்களின் அடிப்படை வசதியினை கருத்திற்கொண்டு மேற்படி பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

2. மேற்படி பணிக்கான செலவினத்தினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

3. பணியின் அவசர அவசியத்தினை கருதி மன்றத்தின் அனுமதி எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.
(ந.க.எண். 104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 269 நாள்: **31 .07.2023**

**தீர்மானம் : குறிப்புகளுக்கு மன்றம் அனுமதி வழங்குகிறது**

**<u>பொருள் எண் 16</u>**

பொன்னேரி நகராட்சியில் **10**வது வார்டுக்குட்பட்ட சர்மா அவென்யூ பிரதான சாலை, சர்மா அவென்யூ முதல் தெரு, **11**வது வார்டுக்குட்பட்ட தேரடி **4**வது முதல் குறுக்கு தெரு மற்றும் **2**வது குறுக்கு தெரு , **14**வது வார்டுக்குட்பட்ட நீலிஅப்பாதுரை தெரு, தண்டபாணி விரிவாக்கம், **20** வது வார்டுக்குட்பட்ட அக்பர் தெரு, ராஜாராணி தெரு, **21** வது வார்டுக்குட்பட்ட பர்மா நகர் **3**வது தெரு மற்றும் **4**வது தெரு, ஆகிய பகுதிகளில் பாதாள சாக்கடை பணிகள் நடைபெற்றதால் சாலைகள் மிகவும் சேதமடைந்து பொதுமக்கள் பயன்படுத்த இயலாத சூழ்நிலை உள்ளது. மேற்படி சாலைகளை சீரமைக்க வார்டு உறுப்பினர்களிடமிருந்தும், பொதுமக்களிடமிருந்தும் தொடர்ந்து புகார்கள் வந்தவாறு உள்ளது. எனவே சேதமடைந்துள்ள மேற்படி சாலைகளையும், சீரமைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மேற்கண்ட இடங்களில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவுற்றதின் காரணமாகவும், இயற்கை இடர்பாடுகள் காரணமாக சாலைகள் முழுமையாக சேதமடைந்ததால் இச்சாலைகளை 2023-24 ம் ஆம் ஆண்டிற்கான **15**வது நிதிக்குழு மானிய திட்டத்தின் ( Untied ) மூலம் மேற்கொள்ளவும் நிதி ஆதாரம் கோரவும் கருத்துருவினை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிட மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   **(ந.க.எண். 104 /2023 அ1)**

நகர்மன்ற தீர்மான எண்: 270 நாள்: **31 .07.2023**

**தீர்மானம் : அனுமதி அளிக்கிறது**

**<u>பொருள் எண் 17</u>**

பொன்னேரி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2023-24 ன்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான சாலைப்பணிகள் மேற்கொள்ள **30.06.2023** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது .

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| **1** | வார்டு எண் **1** கெஜலட்சுமி நகர் முதல் தெரு, வார்டு எண் **2** ராஜராஜேஸ்வரி நகர் முதல் தெரு மற்றும் | **44.00** | மலர்விழி கன்ஸ்ட்ரக்ஷன், பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | ராஜராஜேஸ்வரி நகர் 2வது தெரு, வார்டு எண் 6 ஜீவா தெரு மற்றும் கல்பனா சாவ்லா தெரு ஆகிய தெருக்களில் தார்ச்சாலை அமைத்தல் | | கௌதம் என்டர்பிரைசஸ், பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண் 20 பாவேந்தர் தெரு, வார்டு எண் 22 சங்கர் மாருதி நகர், சங்கர் மாருதி நகர் 1வது குறுக்கு தெரு மற்றும் வார்டு எண் 24 பெருமாள் நகர் ஆகிய தெருக்களில் தார்ச்சாலை அமைத்தல் | 51.00 | OS & Co விடதண்டலம் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | Landstar Infratech. Ponneri | மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | வார்டு எண் 23 ஆனந்தி நகர் மற்றும் வார்டு எண் 7 பாரதி நகர் ஆகிய தெருக்களில் தார்ச்சாலை அமைத்தல் | 58.00 | A.T.சந்தானம், பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| | | | B.ஜோதீஸ்வரன், பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி பணிகளில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கி மேல் நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் பார்வையிட்டு பதியப்பட்டது.

( ந.க.எண் 640/2023 /இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 271 நாள்: 31.07.2023

**தீர்மானம் : மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

<u>பொருள் எண் 18</u>

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி 2023-24 ன்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான சாலைப்பணிகள் மேற்கொள்ள 09.06.2023 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 3 எல்லையம்மன் கோயில் முதல் தெரு மற்றும் வார்டு எண் 5 ஜோதிராமலிங்கம் சுவாமி நகர் 2வது தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 9.90 | முத்தமிழ் கன்ஸ்ட்ரக்ஷன், பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன் பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண் 4 சர்ச் முதல் மற்றும் 2வது தெருவில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 8.70 | முத்தமிழ் கன்ஸ்ட்ரக்ஷன், பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன் பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 3 | வார்டு எண் 5 ஜோதிராமலிங்க சுவாமி நகர் முதல் தெரு மற்றும் வார்டு எண் 2 அரசூர் சாலை குறுக்கு தெரு பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 9.50 | உ.சலீம், பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | முத்தமிழ் கன்ஸ்ட்ரக்ஷன், பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு எண் 5 ஜோதிராமலிங்க சுவாமி நகர் 5வது தெரு பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 9.40 | முத்தமிழ் கன்ஸ்ட்ரக்ஷன், பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | உ.சலீம், பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி பணிகளில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்று பணி உத்திரவு வழங்கலாம்

(ந.க.எண் 104/2023 /இ1)

நகர்மன்ற தீர்மான எண்: 272 நாள்: 31.07.2023

**தீர்மானம் : மன்றம் ஏற்று பணி உத்தரவு வழங்க அனுமதியளிக்கிறது.**

<u>பொருள் எண் 19</u>

பொன்னேரி நகராட்சியில் 15வது நிதிக்குழு மானியம் ( Tied Grant ) 2022-23 ன்கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள 12.07.2023 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | திடக்கழிவு மேலண்மை பணிக்காக 52 எண்ணிக்கையிலான 80லி HDPE Bins, 32 எண்ணிக்கையிலான 150லி HDPE Bins, 2 எண்ணிக்கையிலான எலக்ட்ரானிக் எடை மேடை , 3 எண்ணிக்கையிலான Fly Catcher, 2 எண்ணிக்கையிலான Wheel Barrow , 2 எண்ணிக்கையிலான Napkin Incineratror மற்றும் 1 எண்ணிக்கையிலான தானியங்கி Siever Machine சப்ளை செய்தல் | 3.57 | பி.ஜோதீஸ்வரன் பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | A.T.சந்தானம், பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | திடக்கழிவு மேலண்மை பணியில் ஈரக்கலவை தயார் செய்ய தேவையான Shredder Machine மற்றும் Belt Conveyor | 6.35 | பி.ஜோதீஸ்வரன் பொன்னேரி | மதிப்பீட்டை விட குறைவு |

| | | | | |
|---|---|---|---|---|
| | சப்ளை செய்தல் | | A.T.சந்தானம், பொன்னேரி | மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

மேற்படி பணிகளில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று பணி உத்திரவு வழங்கி பணி தொடர்ந்ததை மன்றம் பார்வையிட்டு பதியப்பட்டது .

**( ந.க.எண் 754/2022 /இ1)**

நகர்மன்ற தீர்மான எண்: 273 நாள்: **31.07.2023**

**தீர்மானம் : மன்றம் பார்வையிட்டு பதியப்பட்டது**

**<u>பொருள் எண் 20</u>**

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2023–24–**ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள **14.07.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | வார்டு எண் 1 ஆற்றங்கரை சிமெண்ட் சாலை அமைத்தல் | 30.00 | எஸ்.கே.பூபாலன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | வார்டு எண் 6 கன்னையா நகர் மற்றும் வார்டு எண் 21 தேவத்தம்மன் நகர் அண்ணா தெரு சிமெண்ட் சாலை அமைத்தல் | 19.50 | உ.சலீம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | முத்தமிழ் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | வார்டு எண் 7 கள்ளுக்கடைமேடு சுடுகாடு சாலை மற்றும் வார்டு எண் 26 பாலாஜி தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 19.60 | எஸ்.எஸ்.பி என்டர்பிரைசஸ், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததார | மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு எண் 20 பாவேந்தர் முதல் தெரு , பாவேந்தர் 2வது தெரு மற்றும் வார்டு எண் 22 சங்கர் மாருதி நகர் 2வது குறுக்கு தெருவில் தார்ச்சாலை அமைத்தல் | 13.40 | எஸ்.கே.பூபாலன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | வார்டு எண் 20 ஜவகர் தெரு மற்றும் வார்டு எண் 21 அன்னை தெரசா தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 7.20 | எஸ்.கே.பூபாலன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மேற்படி பணிகளில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்று பணி உத்திரவு வழங்கலாம் .

2. மேற்படி பணிகளின் அவசர அவசியத்தை கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேல் நடவடிக்கை தொடர்ந்தமைக்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.

( ந.க.எண் 588 /2023 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 274 நாள்: 31 .07.2023

**தீர்மானம் : மேற்படி பணிகளில் பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதிக்கிறது**

<u>**பொருள் எண் 21**</u>

பொன்னேரி நகராட்சியில் பொதுநிதி **2023–24–**ன் கீழ் கீழ்க்காணும் விவரப்படியான பணிகள் மேற்கொள்ள **21.07.2023** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எ | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப் புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | 7வது வார்டு கள்ளுக்கடைமேடு குறுக்கு தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்தல் | 6.00 | முத்தமிழ் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 2 | 12வது வார்டு சிவன் கோயில் தெரு குளக்கரை மழைநீர் கால்வாய் அமைத்தல் | 16.00 | உ.சலீம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | முத்தமிழ் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 3 | 11வது வார்டு தேரடி 3வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்தல் | 8.00 | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | A.T.சந்தானம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 4 | வார்டு எண் 8 பொன்னேரி நகராட்சி அலுவலகத்தில் போர்வெல் அமைத்தல் | 4.20 | A.T.சந்தானம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 5 | ஒருங்கிணைந்த சமையற் கூடத்திற்கு சுற்றுச்சுவர் அமைத்தல் | 15.00 | முத்தமிழ் கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 6 | ஒருங்கிணைந்த சமையற் கூடத்திற்கு சுற்றி பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 7.70 | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | A.T.சந்தானம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 7 | ஒருங்கிணைந்த சமையற்கூட கட்டடம் வளாகத்தில் போர்வெல் அமைத்தல் | 4.50 | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | A.T.சந்தானம், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 8 | நகராட்சி அபிவிருத்தி பணிகளுக்கு ஜேசிபி இயந்திரம் வாடகைக்கு சப்ளை செய்தல் | 4.50 | ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | A.T.சந்தானம், ஒப்பந்ததாரர் | வைப்புத்தொகை செலுத்தவில்லை |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | வைப்புத்தொகை செலுத்தவில்லை |
| | | | திரு.எல்.ஜி.அரசு, ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 9 | வார்டு 20 அம்பேத்கர் தெரு, ஜவகர் தெரு மற்றும் வார்டு 24 நக்கீரன் தெரு ஆகிய பகுதிகளில் உள்ள சாலைகளில் GSB வைத்து சீரமைத்தல் | 5.50 | எஸ்.எஸ்.என்டர் பிரைசஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |
| 10 | 7வது வார்டு கள்ளுக்கடைமேடு பகுதியில் காரிய மேடை வளாகத்தில் ஆழ்துளை கிணறு மற்றும் கழிவறை அமைத்தல் | 7.00 | எஸ்.எஸ்.என்டர் பிரைசஸ் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட குறைவு |
| | | | பி.ஜோதீஸ்வரன், ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலக குறிப்பு

1. மேற்படி பணிகளில் பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்று பணி உத்திரவு வழங்கலாம் .

2. வரிசை எண் 8ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு 4 ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ள நிலையில் ஒப்பந்ததாரர்கள் முறையே திரு.ஏடி.சந்தானம் மற்றும் திரு.பி.ஜோதீஸ்வரன் ஆகியோர் வைப்புதொகை செலுத்தாத காரணத்தால் அவற்றை நிராகரிக்கலாம். மேலும் மதிப்பீட்டைவிட குறைவாக ஒப்பந்தபுள்ளி அளித்த M/s. ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியை ஏற்கலாம்.

( ந.க.எண் 588 /2023 / அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 275 நாள்: **31.07.2023**

**தீர்மானம் : 1. குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்று பணி உத்தரவு வழங்க அனுமதி அளிக்கிறது**

**2. குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த M/S. ஸ்ரீதிருமுருகா கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்திற்கு ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றம் அனுமதிஅளிக்கிறது.**

**பொருள் எண் 22**

இந்நகராட்சி அலுவலக கட்டிடத்தில் நகராட்சி பொறியாளர் அறை மற்றும் பொறியியல் பிரிவிற்கு தேவையான தளவாட பொருட்கள் மற்றும் மேம்பாட்டு பணிகளை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ.**4.50** இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
( ந.க.எண் 104/2023 /அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 276 நாள்: **31.07.2023**

**தீர்மானம் : ஒப்புதல் வழங்கி அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண் 23**

பொன்னேரி நகராட்சியில் பொதுமக்கள் பயன்பாட்டிற்கென கீழ்க்காணும் விவரப்படியான சமுதாயக்கழிப்பிடங்கள் உள்ளன.

| வரிசை எண் | வார்டு எண் | தெருவின் பெயர் |
|---|---|---|
| 1 | 1 | தர்மலிங்கம் தெரு |
| 2 | 3 | நெல்லூர் அம்மன் கோயில் தெரு |
| 3 | 5 | சர்ச் தெரு |
| 4 | 5 | சிவன்கோயில் தெரு |
| 5 | 6 | கள்ளுக்கடைமேடு |
| 6 | 21 | இரட்டைமலை சீனிவாசனார் சாலை |
| 7 | 16 | ஜீவா தெரு |
| 8 | 24 | துர்கா நகர் |

மேற்படி சமுதாயக்கழிப்பிடங்களின் கழிவுநீர் தொட்டிகள் (செப்டிக் டேங்க்) நிரம்பியுள்ளதை அவ்வப்போது தனியார் கழிவுநீர் அகற்றும் ஊர்திகள் மூலம் அகற்றப்பட்டு வருகிறது. இதற்கான தோராய செலவினம் ரூ.1,00,000/- பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க.எண். 34 /2022/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 277 நாள்: **31.07.2023**

**தீர்மானம் : மன்றம் ஒப்புதல் வழங்கி அனுமதி அளிக்கிறது.**

**<u>பொருள் எண் 24</u>**

பொன்னேரி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் தெருமின்விளக்குகளில் மின் பயன்பாட்டினை கணக்கிட தமிழ்நாடு மின்சார வாரியம் மூலம் ஆங்காகே மின்மீட்டர்கள் நகராட்சியால் அமைக்கப்பட்டு உரிய பாதுகாப்பு பெட்டியில் பொருத்தப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு மின்சார வாரியம் மூலம் மின் மீட்டர்கள் பொருத்தப்பட்டுள்ள பெட்டிகள் ஒரு சில இடங்களில் போதிய பாதுகாப்பின்றி உடைந்துள்ளதால் மின் விபத்துகள் ஏற்படும் வாய்ப்பு உள்ளதை ஒட்டி பழுதடைந்த பெட்டிகளை மாற்றியமைக்குமாறு மின்சார வாரியம் மூலம் நேரிடையாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே பழுதடைந்த பெட்டிகளை மாற்றியமைக்கவும் அதற்கான தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. **1.80** -ற்கு மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:-** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க.எண். 951 /2022/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 278 நாள்: **31 .07.2023**

**தீர்மானம் : மன்றம் ஒப்புதல் வழங்கி அனுமதி அளிக்கிறது.**

**<u>பொருள் எண் 25</u>**

உள்ளாட்சி நிதித்தணிக்கை சட்டம் **2014** பிரிவு எண் **7(1 )** ன் படி உள்ளாட்சி நிறுவனங்களின் ஆண்டு கணக்குகள் நிதியாண்டு முடிவடையும் மூன்று மாதத்திற்குள் தணிக்கைக்காக நிர்வாக அதிகாரியால் தயாரித்து அனுப்பப்பட வேண்டும் எனவும் பொன்னேரி நகராட்சியின் **2022-23** ஆம் ஆண்டு கணக்குகளை **30.06.2023**க்குள் அனுப்பி வைத்திட உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை உதவி இயக்குநர், திருவள்ளூர் அவர்களின் **23.06.2023** தேதிய கடிதம் எண் தொ.க.எண் **06**/ஆ**1/2023** வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆண்டு கணக்கினை தணிக்கைக்கு தயார் செய்ய Journal Book. General Ledger. Trial Balance. Balance sheet. ஆகியவற்றை Data Entry செய்யும் பணியினை மேற்கொள்ள இந்நகராட்சியில் போதுமான பணியாளர்கள் இல்லாததால் விலைப்புள்ளிகள் பெற்று **2022-23**ம் ஆண்டு கணக்குகள் தயாரித்து உள்ளாட்சி நிதித்தணிக்கை துறைக்கு சமர்ப்பித்திட தோராய செலவினம் ரூ **1.20** இலட்சம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**அ.கு :** மன்றம் அனுமதி வழங்கலாம்
( ந.க. எண் **658** /2021/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 279 நாள்: **31 .07.2023**

**தீர்மானம் : மன்றம் அனுமதி வழங்கி ஒப்புதல் வழங்குகிறது.**

**பொருள் எண் 26**

இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டிற்கு தேவையான புத்தகங்கள், பதிவேடுகள், படிவங்கள் மற்றும் எழுது பொருட்கள் விலைப்புள்ளி கோரி கொள்முதல் செய்ய நகர்மன்ற தீர்மானம் எண்: 250 நாள் **30.06.2023** ன் படி தோராய செலவினம் ரூ.**5.00** லட்சத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டதன் பேரில் அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் நிறுவனங்களிடம் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. **13.07.2023**ல் பின்வரும் விவரப்படி மூன்று கூட்டுறவு நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளன.

1). Madipakkam Stationary and Registers Making Industrial Co-op Society Ltd. Chennai – 129

2)..Digital India Speed Indusrial Co- op society Ltd Kancheepuram - 631501

3). Maduranthagam Multipurpose Indl Co-op society Ltd. Maduranthagam . Kancheepuram Dist.

மேற்படி மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள நிறுவன விலைப்புள்ளிகள் மற்ற இரு நிறுவனங்களின் விலைப்புள்ளிகளை விட குறைவாக உள்ளதை ஏற்று அலுவலக பயன்பாட்டு பொருட்கள் கொள்முதல் செய்து செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அ.கு : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க. எண் **122**/ 2022/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 280 நாள்: **31 .07.2023**

**தீர்மானம் :** **மேற்படி வரிசை எண் 1–ல் உள்ள நிறுவன விலைப்புள்ளிகள் ஏற்று அலுவலக பயன்பாட்டு பொருட்கள் கொள்முதல் செய்ய செலவினத்தை பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் ஒப்புதல் வழங்கி அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண் 27**

இந்நகராட்சி பகுதியில் அமைந்த சாலையோர கடைகளில் சுங்கம் வசூலிக்கும் உரிமம் பெற்ற திரு. P.மணிமாறன் **2022**-23 ம் ஆண்டுக்கான குத்தகை தொகை ரூ.**5,46,745/-** ஐ செலுத்தாமலும் **2023–24** ம் ஆண்டுக்கான குத்தகை தொகை ரூ.**10,70,682/-** ஆக மொத்தம் ரூ.**16,17,427/-**ஐ நகராட்சிக்கு செலுத்தாமல் இருந்து வருகிறார்.

நகராட்சியின் மூலம் பல அறிவிப்புகள் வழங்கப்பட்டும் குத்தகை தொகை செலுத்தாத நிலையில் குத்தகை நிபந்தனைகளின்படி அன்னாரின் குத்தகை உரிமம் ரத்து செய்து **01.08.2023** முதல் துறையின் மூலம் சாலையோரக்கடைகளில் சுங்கம் வசூலிக்கவும், மேற்படி ஆண்டு குத்தகை இனத்திற்கு பொதுஏலம் மற்றும் ஒப்பந்தபுள்ளி கோரிடவும், நிலுவை குத்தகை தொகையை குத்தகைதாரர் திரு. P.மணிமாறன் என்பவரிடம் சட்ட ரீதியாக வசூலிக்க நடவடிக்கை மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளவும், மன்றத்தின் ஒப்புதல் கோரப்படுகிறது.

அ.கு : மன்றம் ஒப்புதல் வழங்கலாம்
(ந.க. எண் **312**/ 2022/அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 281 நாள்: **31.07.2023**

**தீர்மானம் :** **மன்றம் ஒப்புதல் வழங்குகிறது P. மணிமாறன் என்பவரிடம் சட்டரீதியாக வசூலிக்க நடவடிக்கை எடுக்கவும், செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ள அனுமதி அளிக்கிறது**

**பொருள் எண் 28**

இந்நகராட்சியில் 3வது வார்டு எல்லைக்குட்பட்ட சின்னக்காவணம் எல்லையம்மன் கோயில் 2வது தெரு மண் சாலையாக உள்ளதாலும் மற்றும் 3வது தெருவில் சிமெண்ட் சாலை அமைத்து சுமார் 15 வருடங்களுக்கு மேலான நிலையில் இயற்கை இடர்பாடுகளால் சாலை சேதமடைந்து வாகன போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளதால் இத்தெருக்களை சீரமைத்து கான்கிரீட் சாலைகளாக அமைத்திடவும், அதற்காக தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரூ. 9.20 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணியினை பொதுநிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.
   (ந.க.எண். 104 /2023 அ1)

நகர்மன்ற தீர்மான எண்: 282 நாள்: **31.07.2023**

**தீர்மானம் :** **வார்டு 3எல்லையம்மன் கோயில் 2வது தெரு, 3வது தெருக்களை சீரமைத்து கான்கிரீட் சாலைகள் அமைத்திட மதிப்பீட்டுத்தொகை ரூ.9.20 இலட்சத்திற்கு மன்றம் அனுமதி அளித்து, பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள அனுமதி அளிக்கிறது.**

(ஒம்) கி. பரிமளம் விசுவநாதன்
நகர்மன்ற தலைவர்,
பொன்னேரி நகராட்சி

/உண்மை நகல்/

ஆணையர்,
பொன்னேரி நகராட்சி,
திருவள்ளூர் மாவட்டம்